Delftmedia

# குமுதினி

மே 2016 இல. 01




Delftmedia

**உறவுகளின் கரை தேடி..**

DelftMedia

Delftmedia
# குமுதினி

உறவுகளின் கரைதேடி,

நெடுந்தீவு, இந்து சமுத்திரம் யாழ் குடாவிலிருந்து நெடு தூரத்தில் தனித்துவிட்ட தீவு. தன்னிறைவான பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு அலையோசை நடுவே ஆர்ப்பரித்திருக்கும் தீவு.

எமது குமுதினி முதலாவது இதழ்

மாவிலியையும் குறிகாட்டுவானையும் கடல் வழியே ஒன்றிணைக்கும் பணியினை அரை நூற்றாண்டிற்கு கூடுதலாக குமுதினி படகு மேற்கொண்டுவருகின்றது.

எமது Delft Media நிறுவனத்தினால் மாதாந்த குமுதினி மலரும் உலகம் பூராகவும் வாழ்ந்துவரும் எம்மவர்களை ஒன்றிணைக்கும் பாலமாக வெளிவரும்.

உணர்வுகள், உண்மைகள், உறவுகள், வரலாறுகள், ஞாபகங்கள் அனைத்தினையும் சுமந்து மாதாந்தம் "குமுதினி" உங்கள் கரைதேடி விரைவாள்.

31 வருடம் கடந்தும் நெஞ்சில் வடுவாய் நிலைத்திருக்கும் குமுதினி படுகொலை மே 15, முதலாவது மலரானது குமுதினி சிறப்பு மின்னூலாக உங்கள் கரங்களில் இன்று...

உறவுகளின் கரைதேடி குமுதினி....

அன்புடன்
ஆசிரியர்

2016.06.01

இது ஒரு *Delft Media* வெளியீடு

Delftmedia

# குமுதினி


தொடர்புகளுக்கு

editor@kumuthini.org
delftmedia@hotmail.com

தொலைபேசி

0033 65 073 7248
0044 79 18 34 00
0094 77 103 4461





இணையம்

**www.delftmedia.com**

மின்னூல்

**www.kumuthini.org**


இதழ் வடிவமைப்பு
S.ஓவியா - Design Hub

அட்டைப்படம்
ந.தீலீபன்

இது ஒரு *Delft Media* வெளியீடு

# 31 ஆம் ஆண்டு குமுதினிப் படுகொலை நினைவு நாள்.

கவி.அகிலன்

நாட்டியமாடும்
நயினைக் கடலும்
சுழன்றடித்து வீசும் சோளகக் காற்றும்
உதிரத்தை உறையவைத்த
செய்தியை சொன்னது
உலகமே உங்களுக்கு
குமுதனியை தெரிகிறதா

பசியாற விருந்தளிக்கும்
நம் ஊர் வாசிகளையும்
பச்சிளம் பாலகியை கதறக் கதற
குத்திக் கொன்ற கொலையாளிகளை
உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?

கடலலை சிகப்பானது
கண்ணீர் பெருக்கானது
எத்திசை நோக்கினும் அழுகுரல்
ஒலியானது.

கிழக்கில் இருந்து
மேற்கு வரை மொய்க்கும்
ஈக்கள் கூட இரையற்றிருந்த நாளது.

புளியமரங்களும், பூவரசம் மரங்களும்
காற்றோடு புலம்பி அழுத நாளது
என்னூர் கோழிகளும், காக்கைகளும்
மார்பில் அடித்து கதறிய மரண நாளது.

கூவியெழும் அலைகளின்
கூக்குரல் கண்டு
கூவித்திரிந்த குயில்கள் கூட
விம்மி அழுத நாளது.

துள்ளித் திரியும்
ஆடுகளும், குதிரைகளும்
சோந்து போய் கிடந்த அவல நாளது

நான் கூட பிறக்காத அந்த நாள்
என் சொந்தங்கள் பலபேரை
இழந்த நாள்.
சப்த தீவின் முத்தான
என் நெடுந்தீவே செத்துக்கிடந்த நாள்
உலகை உலுக்கிய
குமுதினி படுகொலை நினைவு நாள்.



# நினைவேந்தல் நிகழ்வுகள்



1985ம் ஆண்டு எம் தீவின் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கொலை செய்யப்பட்ட உறவுகளது 31வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் மிகவும் அமைதியான முறையில் உணர்வு பூர்வமாக காலை வேளையிலே இடம் பெற்றது இறந்தவர்களது ஆத்மா சாந்தி வேண்டி புனித சவேரியார் ஆலயத்தில் காலை 06.00 திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் தொடர்ந்து இறந்தவர்களை நினைந்து உறவுகளும் நண்பர்களும் ஈகைச்சுடேற்றி மலர் தூவி அஞ்சிலி செலுத்தும் நிகழ்வு மாவிலித்துறைமுகத்தில் அமைந்துள்ள நினைவுத் தூபி வளாகத்தில் இடம் பெற்றது.


15.05.1985 ல் குமுதினி
படகில் வெட்டப்பட்டு
இறந்தவர்கள்
த.இராஜேஸ்வரன்
மு.மணிவண்ணன்
த.அமிர்தலிங்கம்
செ.சந்திரகுமார்
சா.குசலகுமாரி
கு.கனகலிங்கம்
ச.கோவிந்தன்
ம.யேசுநாயகம்
வே.கந்தையா
சு.யேசுதாசன்
சி.அந்தோனி
இ.முருகன்
க.கார்த்திகேசு
சி.தில்லைநாதன்
ப.நிர்மலாதேவி
தொ.நாகேந்திரன்
கு.விநாயகமூர்த்தி
ஞா.மரியமாணிக்கம்
செ.கிறிஸ்ரினம்மா
ப.சொர்ணம்மா
வே.புஸ்பராணி
கி.எலிசம்மா
ஐ.தெய்வானை
ப.யோகராசா
வே.சின்னையா
வை.சதாசிவம்
வி.சுபாசினி
த.சசிகலா
ப.நிர்மலா
அ.அனுசியா
இ.கனகம்மா
ப.மரியம்மா
க.சதாசிவம்
ந.கந்தையா
அ.அந்தோனிப்பிள்ளை
ஞா.தேவசகாயம்பிள்ளை



# மீண்டும் உயிர்க்குமா நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்?

(உதயன்)

நெடுந்தீவின் முகப்பிலே அமைந்திருந்து பொதுமக்களது செய்தித் தேவைகள் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கல்வி தொடர்பான தேவைகளை நிறைவேற்றி வந்த நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம் அதன் நூலகப் பகுதி இரகுபதி நினைவு நூலகம் என்பன தமது சேவைகளை தாமாக இன்றி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக கட்டாயமாகவே நிறுத்தப்பட்டு இன்று வரை அவ்வாறே செல்கிறது.

2007 ஆம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம், நிலையப் பகுதியைப்பகுதியை கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் அதாவது கட்டுக்குள் கொண்டு வந்து துறைமுகப்பகுதி முதல் நிலையவளாகம் வரை அவர்களது நிலைகளே உள்ளது.

இருப்பினும் நாளடைவில் சனசமூக நிலைய வளாகம் நெடுந்தீவில் உள்ள வேலை வாய்ப்பற்ற, வசதி குறைந்த மகளிர்களது வருமானத்தையும் உயர்த்தும் ஒரு புடைவை தையல் நிலையமாக மாற்றியுள்ளது. இது ஒரு புறம் மகிழ்ச்சிதான்.

இருப்பினும் நிலையப் பகுதியைவிட எவ்வளவோ நிலப்பரப்பு வேறு இடங்களில் உள்ளது.

அவ்வாறான இடங்களில் தமது படைக்கான ஆடை உற்பத்தி நிலையத்தை வைக்கலாம். எம்மையும் எமது நிலைய சேவையை செய்யவிடலாம்.

இது வரைக்கும் படையினர் வசமிருந்த இடங்களில் சில உரியவர்கள் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுமக்கள் நலனுடன், அவர்களது முன்னேற்றத்தில் கைகொடுக்கும் சனசமூக நிலைய வளாகம் மட்டும் இன்றும் விடுபடவில்லை. இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர், மற்றும் நிலைய நிர்வாகத்தை கட்டுப்படுத்தும், நெடுந்தீவு பிரதேச சபை எனபவற்றுக்கு கடிதம் மூலம் நிலைய வளாகம் விடுவிப்பு தொடர்பாக அறிவித்துள்ளதாக அறிகின்றோம். இருப்பினும் இதுவரையும் ஆக்கபூர்வமான முடிவுகள் இல்லை. இன்று நிலையம் தமது சேவையை மட்டுப்படுத்தி வாசகர் பகுதியை மட்டும் தனியார் ஒருவரது வாடகை வீட்டில் நடத்தி மக்களது, வாசகர்களது தேவைகளை நிறைவேற்றி வருகின்றது.

இருப்பினும் நிலையத்தில் விடுதலை, விடுவிப்பு விரைவில் வேண்டும் ஏனென்றால் புத்தகங்கள் என்றைக்கும் பூட்டி வைக்கப்பட்ட வேண்டியவையல்ல. அவையனைத்தும் வெளிப்படுத்தப்பட வேண்டியவை என்றும் புரட்டிப் படிக்கத் தேவையானவை.

எனவே நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையக் கட்டடத்தை விடுவித்து மக்களது சமூக, பொருளாதார, நலச் சேவைகளை சொந்த இடத்தில் இருந்தே தொடர்வதற்கு ஏற்ற வழிகளை தொடர்புடைய சகல தரப்பினருமே திறந்த வைக்க வேண்டும். இதனையே நெடுந்தீவு மக்களும் எதிர் பார்த்துக் காத்துள்ளனர்.

**நெடுந்தீவு கிழக்கு சனசமுக நிலைய கட்டடத்தை விடுவித்து மக்களின் சமுக, பொருளாதார, நலச் சேவைகளை சொந்த இடத்தில் இருந்தே தொடர்வதற்கு ஏற்ற வழிகளை தொடர்புடைய சகல தரப்பினருமே திறந்து வைக்க வேண்டும். இதனையே நெடுந்தீவு மக்களும் எதிர்பர்த்துக் காத்துள்ளனர்.**

இந்த வகையில் நிலையக் கட்டடத்தைப் பெற்றுத்தர சகல தரப்பினரும் ஒத்துழைத்து அதனை மீள இயக்க வழிசமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் இதில் அரசியல் வேண்டாம் மக்கள் நோக்கே முன்னிறக வேண்டும்.

அன்று தொடக்கம் நிலையமானது வாசகர் பகுதியுடன், சிறுவர் பகுதி, பொழுது போக்கு பகுதி மற்றும் ஊர்ப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து தீர்வு செய்யும் பகுதி என அந்த அரசடியில் உள்ள நிலையம் தனது பணிகளை நிறைவாகவே செயற்படுத்தி வந்தது.

காய்க்கின்ற மரம்தான் கல்லெறிபடும் என்பதுபோல சேவைகள் பல வழிகளில் தொடரும்போது தான் அதன்மேல் ஆதிக்கம் தொடரும், தடைகள் கிட்டும். அனால் இற்றைக்கு 9 வருடங்களாக தனது பணிகளை முன்னெடுக்க முடியாமல் செயற்பாடுகள் இன்றி உறைந்து போயுள்ளது நிலையமும் நிலைய வளாகமும்.

தைப்பொங்கல் என்றால் படகு சேவைக்கு முன்னரே நிலைய முன்றிலில் பொங்கல் பொங்கி பயணிகளுக்கெல்லாம் பொங்கல் கொடுத்து அதாவது காலை உணவு வழங்கி வழியனுப்பி வைக்கும் நிலையம் இன்று இராணுவ உடைகளுக்குள் உள்ளடங்கி நிசப்தமாகப் பொலிவிழந்து காணப்படுகின்றது.

இதனை எப்படியாவது நெடுந்தீவு கிழக்கு மக்ளாது கையில் கிடைக்கக் கூடிய வகையில் எவராவது வழிசமைப்பார்களா? இது கிட்டுமா? அங்கு ஏன் உயர் பாதுகாப்பு மக்கள் தான் இவர்களுக்குப் பாதுகாப்பு.

எனவே நிலையப் பகுதியும் அரசடியும் மீண்டும் இளைஞர்கள், முதியோர்களது கையில் கிட்டவேண்டும் இதனை யார் பெற்றுத் தருவார்...?

# நிலாந்தனின் கடலம்மா !!

கடலம்மா...கடலம்மா... நீயே சொல்
குமுதினி ஏன் பிந்தி வந்தாள்?-எம்மவரின்
அவலங்களைச் சடலங்களாய்ச் சுமந்துகொண்டு
குமுதினி குருதி வடிய வந்தாள்......

கடலம்மா கண்டாயோ?
கார்த்திகேசு என்னவானான்?
எந்தக் கரையில் உடலூதிக் கிடந்தானோ?
ஓ... சோழகக் காற்றே....
நீ,வழம்மாறி வீசியிருந்தால்..."குமுதினிவரமாட்டாள்"
என்றுநெடுந்தீவுக்குச் சொல்லியிருப்பாய்.
பாவம்.......
மரணங்களின் செய்தி கூடக்கிட்டாத
தொலைதீவில்,
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்காத்திருக்கும் மக்கள்...
கடலம்மா..... நீ மலடியடி ......
ஏனந்தத் தீவுகளைஅனாதரவாய்த் தனியே விட்டாய்?
கடலம்மா...
உன் நீள் பரப்பில்அனாதரவாய் மரணித்த
எம்மவரை புதிய கல்லறைகளை எழுப்பி
அனாதைக் கல்லறைகள் என நினைவூட்டு.
ஆனால்....,இனிவருங் கல்லறைகள்
வெறும்இழப்புக்களின் நினைவல்ல,
எமதுஇலட்சியங்களின் நினைவாகட்டும்!

நிலாந்தன்



உங்களது
எண்ணங்களையும்,
எழுத்துக்களையும்

எம் மலரில் இணைத்திட
விரும்புகின்றீர்களா



வாசகர்
பக்கம்

delftmedia@hotmail.com

எமது குடும்பத்தில் ஒருவராக
வேண்டுமா

எமது பிரதேச செய்திகள் மற்றும்
ஆக்கங்களை

delfmedia@hotmail.com

என்ற மின்னஞ்சலுக்கு
அனுப்பிவையுங்கள்.




# புகைப்படப் பக்கம்


SOUTH E








# புகைப்படப் பக்கத்தில் உங்கள் படங்களும் இடம்பெற வேண்டுமா ?

# Click & Send

**delftmedia@hotmail.com**



மானுடத்தின் மைந்தனை இழப்போமா!
எம் மண்ணின் ஆழுமை
ஆரவாரமற்று
தன்னால் முடிந்ததை ஆற்றியது
பேருக்கும் புகழுக்குமாய்
ஆலாய்ப்பறக்கும் காலத்தில்
அமைதியாய் சென்றனர் -எங்கள்
ஊரின் விருட்சம்
ஆம்,
எங்கள் சண்முகநாதனண்ணை

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா நடாத்தும்

# மாவிலிவசந்தம் 2016

## விருதுவிழா

தமிழ் தேசியத்தின் அருட்தந்தை இரா யோசப் அடிகளாருக்கு
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா வழங்கும் விருதுவிழா
பற்பல கலைபண்பாட்டு நிகழ்ச்சிகளோடு

**Saturday, June 04Th at,5:30 pm**



**Thamil Arts Auditorium**
1120 Tapscott Road Unit #03
Scarborough M1X 1E8
Mcnicholl & Tapscott





இவ் மாவிலி விருதுவிழாவில் தாயக உறவுகள் நெடுந்தீவு மக்கள் ஒன்றிய அங்கத்தவர்கள் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்

All friends and families join us to celebrate this event

விருதுவிழா நிகழ்ச்சி மற்றும் விபரங்களுக்கு கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றியுடன்:Contacts: Panchan: 416-629-4040 Rajarajan:416 726-6317
Thaso:416-276-9530 Para: 416-533- 3455-*Entrance free*

Delft People Cultural Organization Of Canada
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

# துவம்சம்..

குமுதினி .........
இந்தப் பெயரை,
உச்சரிக்கும் உதடுகள்- இன்றும் கூட
துக்கத்தால் ஒரு கணம்
ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்கின்றன!!

காகம் கத்தித் துயிலெழும் - என்
இனிய தீவினை ........
பட்டணத்தோடு இணைத்த
பாலம் அவள்!

அவள் மடிமீது ஏறிய பின்புதான்,
எங்களின் பனாட்டும், பாயும்.......
ஓலையும், ஒடியலும் .........
பண நோட்டுக்களாக மாறின !!
பிரபஞ்ச உருண்டைக்குள் தான்,

எத்தனை பிரமிப்புகள் -அத்தனையும்
அந்தப் பாவைமீது காலை வைத்த - பின்புதான்
நாம் கண்டுணர முடிந்தது !!!
ஆயிரம் பேதம் சொல்லி,
பனம்கிழங்குக் கூறுகளாய்........
கிழிபட்டுக் கிடந்த என் மக்களை
"மனிதமே, நேயமென்று"
தன் மடிமீது சுமந்து ......
பரஸ்பரம் புரிந்துணர்வுள்ளவர்களாக்கிய
புண்ணியவதி அவள் !

பலனை எதிர்பாராமல்,
கடமையை மட்டும் செய்த
கீதை படிக்காத கோதை !
என் கையில் சுமந்த புத்தகங்கள் .....
காலில் நசிபடும் செருப்பு ........
தீபாவளிப் புத்தாடை .....
பொங்கலாய்ப் பொங்கும் புதுப்பானை .......
அப்புவையும்,ஆச்சியையும்,
கிடத்திவைத்த சவப்பெட்டிகள் .......
எல்லாமே ...... எல்லாமே ..........
அவள் சுமந்தவை !

கட்டுமரங்களுக்கும் கைவலி-
வள்ளங்களுக்கும்
கல்தாக் கொடுத்துவிட்டுக்
கடும் வேகக் கப்பலாய் - என்
துறைமுகத்தில் மிதந்த அழகுராணி !
புள்ளிமானாய் துள்ளிக் குதித்து - அவள்
ஏழாற்றுப் பிரிவைக் கடக்கிறபோது .......
மலைபோல் உயரும் அலைகளும் - அவளிடம்
கைகட்டிப் பணிந்து,

மௌன நுரையாய் சிதறுண்டு போகும் !!
அதிகாலையின் பனிச்சிதறலோடு ......
அன்றும் அவள் - தன் அரும்புத்திரர்களோடு
புறப்பட்டுப் போனாள் !!

பிரளயம் என்பதை அறியா - அவளையே
பிரளயமாக்கின ஆயுதக் கூலிகள் !!
வெடித்து வீசியெறிந்த பட்டாசுத்
துண்டுகளாய் ..........

காலறுபட்டு ........கையறுபட்டு ........
துடிக்கத் துடிக்க .........
அவ்ள் மடியில் உயிர் போன,
என்னுயிர்த் தங்கைகளின்
அழகான கனவுகள் பற்றி .......

இன்னமும் ....... அவர்கள் ........
வாழ விரும்பிய வாழ்க்கையைப் பற்றி .......
பலமாதமாய், பவித்திரமாய், உருவாகி
கணப்பொழுதில் கருவுடனேயே ........
சிதையில் எரிந்த என் நண்பனின்,
மனைவி பற்றி ........
பதைக்கப்,பதைக்க
கொலையுண்டு கிடந்த
பச்சை மழலை பற்றி .....

மரணிக்கும் போதும்,
எதிரியிடம் மண்டியிடாது
உயிர் விட்ட என்னூர்- வீர
அன்னைகள் பற்றி ......
என்னினிய உணர்வில்
தமிழைக் கலந்து,
தன்னுயிரைக் கூலிப்படைக்கு
காவு கொடுத்திட்ட
தமிழாசிரியன் பற்றி .......

எவரைப்பற்றி .......
எவரைப்பற்றி ........
நான் புலம்பி அழ ?????
வெல்லை, பெருந்துறை .......
குடவிலி, குவிந்தா .......
எத்திசை நோக்கினும்
எங்கும் அழுகுரல் !!
கீழ்த்திசையிருந்து ........
பெருந்துறையீறாய்.........
ஈக்களும் கூட இரையற்றிருந்த நாள்.
என்னூர்க் கொண்டைச் சேவலும்,
காக்கையும், கூட மார்பில்
அடித்த மரண நாளது !!
வீகாமனும்,வெடியரசனும்,
ஆண்ட திருத்தீவு
விம்மல்களால் நிறைந்த நாளது !

பூதத்தைக் கொண்டு பொழிந்த - கிணறுகளில்
நன்னமுத நன்னீர் குடித்த - மனிதர்களின்
கண்ணீர் பெருகிக் கரையுடைந்த நாளது .
இந்து மாக்கன்னியின்,
பொட்டெனப் போற்றிடும் .......
நெடுந்தீவகத்தின் உயிர்களின் பெறுமதி -
கேவலம்
காட்டிலே வெட்டிய கால்நடை போன்றதா ??
ஈழதேசத்து மூளையாய்த் திகழும் - அழகிய
தமிழின் இலக்கணத்தீவு ........


அந்நியன் கண்ணில், துச்சமாய் ஆனதோ ???
கூவியெழும் அலைகளின் கூக்குரல் - இக்
காற்றில் தவழ்ந்து காதில் உறைக்கிறது.
மரணத்தை வென்ற மாமறவர் நீங்கள் !!
மண்ணின் மடிவெடித்து மறுபடியும் பிறப்பீர்கள்.
ஆழ்கடலிருந்து .....
அலைகடலின் மடியிருந்து ......

வெட்டத் தளைக்கும் மரங்களாய் .....-நீங்கள்
விட்ட இடமிருந்து விழுதுகளை எறிவீர்கள் !!!

நன்றி

மா.சித்திவினாயகம் -
மாவிலி மலரிலிருந்து

# "எங்கள் வீட்டு குட்டித்தேவதை"



என்னதான் நிகழ்கிறது என்பது எதனையுமே
அறிந்திராத என் உடன்பிறப்பு இந்த பச்சிளம்
பாலகியால் கூட அன்பையும் அறநெறியையும்
போதித்த புத்தபெருமானின் வாரிசுகளிடமிருந்து
எதனையும் பெறமுடியாமல்போனது...!
பிஞ்சுமழலை மேனியை முக்கூர்முனை
கொண்ட ஆயுத்த்தால் பறித்தெடுத்தாலும்
எங்கள் நெஞ்சங்களில் அசராமல்...நீங்கா
நினைவுகளால்...வாழ்ந்துகொண்டிருக்கிறாள்..
எங்கள் வீட்டுச் சீமாவட்டி ..
இந்தகுட்டித்தேவதை..

யாழ் சபேசன்
நெடுந்தீவு

THAAI TV
NETWORK

எமது மொழி,இனம்,கலை,பண்பாடு
இவைகளை முன் நிறுத்தி
தாய் மண்ணின் பெருமையை சுமந்து
எம் உறவுகளை நோக்கி வருகிறது.

24/7 LATEST NEWS

THAAI NEWS
.com

அடுப்படி தொடக்கம்
அரசியல் வரை.!

www.thaaitv.com/www.thaainews.com
www.thaaimedia.com /www.thaaitv.uk

You Tube /Thaai TV


எம் மண்ணிற்கு
பெருமை சேர்த்த
எம்மவர்கள்..
மாதம் தோறும்
உங்கள்
குமுதினி
இதழில்
காத்திருங்கள்.

# குமுதினி படுகொலையின் நினைவாக தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு.







நெடுந்தீவு ஒன்றியம் (ஐ.இ)த்தினரின் ஏற்பாட்டில் குமுதினி படுகொலையின் நினைவாக நெடுந்தீவு மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு 14.05.2015. அன்று நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.



நெடுந்தீவு சம்மந்தமான
விளம்பரங்களை
வடிவமைக்க எம்மோடு
தொடர்பு கொள்ளவும்
மரண அறிவித்தல்கள்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
ஒன்றியங்களின் பிரசுரங்கள்
இலவசம்
Delftmedia
/delftmedia

'அ'னாவும்
அம்பிளிக்காசும்
கவி. அகிலன்
வீடுகள் உயிர் உள்ளவை
ஒரு தாயின் கருவறையின்
கதகதப்பைத் தருபவை.
நெடுநாட்கள் கழித்து
பிறந்த வீட்டுக்குச் செல்பவர்கள்
மீண்டும் அம்மாவின் கருவறைக்குள்
வளர்ந்த உடலுடன் நுழைகிறார்கள்.
வெளியீடு

# குமுதினி-15.05.1985

கற்களும் கண்ணீர் சிந்திய நாள்
அதுதான் குமுதினிப் படுகொலை
கடலும் ரத்தமாகிய காலம்
அதுதான்
நடுக்கடலில் கோரத்தாண்டவம்
ஒரு கிராமத்தின் கனவுகளை
சமுத்திரத்துக்குள் புதைத்த நாள்
அதுதான் குமுதினி படுகொலை
நெடுந்தீவே ஒரு கண்ணால்
அழுத நாள் அதுதான்
எம் தீவின் இனக்கொலை
ஒரு வெறிபிடித்த அரசு
எதுவும் அறியாத மக்களின்
உயிர் குடித்த கொரூரம்
ஆயுதம் உள்ளோனுடம்
மோதத்தெரியாத அரசு
அப்பாவி மக்களை கூறுபோட்ட
சரித்திரம்
அலையோடு படகுரசி
ஆனந்தமாய் தென்றல் வீசி
கரை கொண்டு சேர்க்கும்
குமுதினி பெண் இவள்
எம் ஊரைசுமக்கும் தெய்வமிவள்
இவளைத்தான் அந்த வைகறையில்
நட்டநடுக் கடல்பரப்பில்
கதறக் கதற வெட்டியெறிந்தார்கள்
இந்நாட்டு வேற்றினத்து வேடர்கள்
இராணுவமுகாமை சுற்றிய
நாய் கூட்டத்திடம்
ஒரு எலும்புத்துண்டு கிடைத்தால்
எப்பிடி இருக்கும்
அப்படி இருந்தது அன்று
தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்த
குழந்தையின் வயிற்றை
குத்திக்கிளித்தது
கூரிய வாள்
தலைகள் அறுபட்ட முண்டங்களாகவும்
உறுப்புக்கள் அறுபட்ட
உடல்களாகவும்
துடித்துக்கிடந்தனர் மக்கள்
சிறகுகள் இழந்த விட்டில்களாகவும்
குரவளை நெரிக்கப்பட்ட
கோழிக்குஞ்சுகளாகவும்
பதைபதைத்தோம்
சினம் கொண்டவர்களின் சித்திரவதை,
வெறிபிடித்தவர்களின் விபச்சாரம்
வெட்டியும், அடித்தும்,
குத்தியும், நெரித்தும்
இங்குதான் புத்தனே...
உன் பக்தர்களின் ஆனந்தபரவசத்தை
எம் மக்கள் மீது ஆடினார்கள்
கத்தினோம், கதறினோம்
திசைகள் உடைந்தது
வனம் கிளிந்தது
விட்டுப்போகவில்லையே....
எல்லோரையும் வெட்டித்தான் போனார்கள்
சமுத்திரம் தாண்டி
நகரம் புறப்பட்ட மக்களை
அன்று நடுக்கடலில் வைத்து
ரத்தமும், சதையுமாக தின்று தீர்த்தனர்
இந்நாடின் வீரர்கள்
சிங்கம் குட்டி ஈன்றாலும்
குட்டிகுடிக்க குருதி கொடுப்பதில்லை
இந்த சிங்களங்கள் எம்
குருதிகுடித்து குதூகலித்தது
புறாவின் நிறைக்கு சமமாக
தன் தசைகொடுத்த சிபியின்
வம்சமல்லாவா தமிழன்
ஏராளமாய் கொடுத்தோம்
மனிதமாமிசம் உண்ணும்
இந்நாட்டு மன்னர்களுக்கு
கற்களுக்குள் குடியிருக்கும்
உயிர்கள் கலைந்துவிடுமென்றெண்ணி
கற்களைக்கூட புரட்டாதவர்கள்
இந்தக் கிராமத்து மனிதர்கள்
கனவுகளோடு போன
பயணிகளையும், படகையும்
குருதிச்சேற்றுக்குள்
புதைத்து விட்டார்களே....
மறக்கவில்லை இந்த நாடு
ஒவ்வொரு மனக்கண்ணும்
நகக்கண்களும்கூட
கண்ணீர்விடும் நாள்
உறவுகளே
உங்களுக்காக அழுவதற்கும்,
உங்களைத்தொழுவதற்குமான
சுதந்திரமும் விலங்குபோடப்பட்டுள்ளது
அந்த கறுத்துப்போன வைகறையில்
சிந்தப்பட்ட கண்ணீருக்கும்
சிதறப்பட்ட ரத்தத்துக்கும்
ஒரேயொரு நிமிடம்
உங்கள் கண்கள் மூடட்டும்.

-நேதாமோகன்-


மே 15
குமுதினி படுகொலை
வலிகளுடன் 31வது ஆண்டில்


அழுகையின் அலைகள்
31
ஆழ்கடல் தன்னில்
தவறியே விழுந்தும் - உயிர்
அளியா எம்மண்ணில்
தவறாக வந்து - உயிர்
அள்ளிய மாயமென்ன
என்றுமே அழுவோம் ..
நெடுந்தீவு
கிழக்கு சனசமூக
நிலையம்
15-05-2016
Delftmedia


15-05-2016
15.05.1985 ல் குமுதினி
படகில் வெட்டப்பட்டு
இறந்தவர்கள்
அலையின் தாலாட்டில்
31
குமுதினியாள் தாங்கிய - மக்கள்
சுமைகள் தான் இன்றும்
குமுறவே செய்கிறது - எங்கள்
சுவாசங்கள் எங்கும்
குமுதினியே மெல்லவே - எங்கள்
சுமைகளை சுமந்திடு
Delftmedia
நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்

# குமுதினிப் படுகொலை ஆவணப்படம் வெளியீடு

குமுதினி- கடலோடு கரைந்து போகாது, காலம் இட்ட துயர்
நீலக்கடல், நெடுந்தீவினை குடாவிலிருந்து பிரித்து கொண்டது.
பௌதீகம் நெடுந்தீவினை தனித்து விட்டிருந்தாலும் மானிடம் குடாவோடு இணைத்தே வைத்திருக்கின்றது. வாழ்வுக்கான தேவைகள், கடலைக் கடக்க வேண்டிய அவசியத்தை இயற்கை கொடுத்தது. தினமும் காலையில் கனவுகளோடு பலரைக் காவிச் சென்று கரை கண்டதாய் குமுதினி. மாவிலித்துறையையும் குறிகட்டுவானையும் இணைக்கும் தார்மீகப்பொறுப்பை அலை நுரைகளை ஊடறுத்து காற்றினை கிழித்து காத்துக் கரையேற்றிய குமுதினியின் மனிதநேயத்தை நேசித்தவர்கள் நெடுந்தீவு மக்கள்.
காலையில் உழைப்பாளரையும் மாலையில் ஊதியத்தையும் கொண்டு தன் பயணத்தை விரைந்த குமுதினி ஓர் நாள் வரலாற்றில் வலிகளை சுமந்து கொண்டது

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி இயல்பாகவே எழில்மிகு மண் தன்னகத்தே கொண்ட மகிழ்வோடு ஆதவனை தரிசித்தது. ஆனால் உலுக்கும் துயரத்தை சுமந்து அந்த நாள் எம் சரித்திரப்பக்கத்தில் தரித்து விடப்போகின்றது என்று யாரும் எதிர்பார்த்திலர். வழமைபோலவே காலையில் மாவலித்துறை பயணிகளும் வழியனுப்புவோரென குதூகலித்துக்கிடந்து. வழமைக்கு மாறாக எதுவுமே நடக்கவில்லை முதல் அரைமணிநேரத்தில் குமுதினி நடுக்கடலை அண்மித்த போது தான் கண்ணாடியிழைப்படகு வழிமறித்தது. மூவர் கடற்படை சீருடை தரித்திருக்க அறுவர் கொச்சைத்தமிழ் பேசியபடி படகில் ஏறினர். இது தான் கிடைத்த அடையாளம். திட்டமிட்ட படுகொலையென்பதை தேசம் அறியும்.

துப்பாக்கி கைக்கோடாரி முக்கோணக்கத்தி என்று ஆயுதபலம் அவர்களிடம் இருந்தது அதிகார பலமும் கூடவே.முதலில் அனைவரையும் படகின் முற்பகுதி அறையில் அடைத்து ஒவ்வொருவராய் அழைத்து பெயர் விலாசம் சொல்லவைத்து கொல்லும் கொடூரம் சரமாரியாய் தாக்கிய போதும் தப்பி பிழைக்க கடலில் பாய்ந்தோரை துப்பாக்கி ரவைகள் தாக்கிய மரண ரணம் 45 நிமிடங்கள் எங்கள்கடல்பரப்பில் தொடர்ந்தது.

பிஞ்சுகள் பெண்கள் வயதானோர் என்று இரக்கத்தின் இருப்பிடமான மக்கள் இரத்தம் சிந்தி இறந்ததை வரலாற்றில் எழுத நினைத்தால் காகிதங்களும் கண்ணீர் வடிக்கும் காணொளியும் கதறியழும் எந்த இனத்திற்கும் நிகழாத கொடூரம் ஐநா வரை போனபோதும் எம் குமுதினி மனிதநேய அமைப்புக்களின் கோப்புக்களில் உறங்கிப்போனது. ஒரு வயதிலும் குறைந்த குழந்தை முதல் 80 வயது முதியவர் வரை 36 பேர் உயிர் இழக்கப்பட்டது.
மீதமானோர் குற்றுயிராய் மீட்கப்பட்ட அவலம்.

மனிதாபிமானத்துக்கு மரண தண்டனை வழங்கிய கோரத்தின் உயிர்வலி.
சாட்சியங்களோடு நீளும் படுகொலையாளர் தப்பித்துக்கொள்ளமுடியுமாயின் மானுடவாழ்வின் இயங்குசக்தி தன்பணியை நிறைவேற்றட்டும்

கோழைத்தனமாக பறிக்கப்பட்ட எமது உறவுகளின் உயிர்மூச்சு முப்பத்தியொரு ஆண்டுகள் கடந்தாலும் நெஞ்சத்தில் ஆறாத்துயராய் எம் மண்ணின் கரையை உரசும் அலைகளாய் வாழும்!
எமது மண்ணையும் மக்களையும் போலவே,
தாய்மையின் தவிப்போடு
வடுக்களை தாங்கிய குமுதினித்தாய் மிடுக்கோடு பயணிக்கிறது!

https://www.youtube.com/watch?v=FHIos_H76c8

# எம் நெஞ்சத்தில் நீங்கா உறவுகளே அஞ்சலிக்கிறோம்!!

பெற்றதாயும்
பிறந்த எம் மண்ணும் உயிராய்
சுற்றமும் நாம் கற்ற சூழலும்
எம் உற்ற உறவுகளாய்
கூடி மகிழ்ந்து வாழ்ந்த மண்

எமைத் தாங்கிக் கரையேற்றிக்
காத்த கடல்மடியில் -எம்மண் உறவுகள்,
அரச காடையரால் அவலத்தில்போன நாள்
எம் நெஞ்சத்தில் நீங்கா உறவுகளே
அஞ்சலிக்கிறோம்!!

ஈனத்தனமான இனவெறி
அரச ஆணைக்குட்பட்டே
கடல் நடுவே கோரமுகத்தைக் காட்டியது
கருவில் உருவாகும் உயிரிலும் கூட
கருணை காட்டா பேய்கள் பாராண்டால்
மனிதம் மதிக்கப்படுமா?
ஆளும் கனவும்
இன அடக்குமுறை நிந்தனையும்
போரில் தர்ம நீதியற்ற-அரசை
எமை ஆளும் அரசென யார் சொல்வார்?
வாழும் நிலமும்
வரலாறாய் நீண்ட வளமும்
பேசும் மொழியும்
கலையும் கலாச்சாரமும் அவரவர் உரிமை

யாருக்கும் அடிபணிந்து வாழ்ந்தவரல்லர்
என்னூர் மக்கள்
வந்தோரை வரவேற்று
பாசத்தில் திணறிப்போய்
சென்றவர்களைத்தான்
நாம் பார்த்தோம்
எமைக்கொன்றுபோட வருவரென
யாருக்குத் தெரியும்

யாருக்கும் அடிபணிந்து வாழ்ந்தவரல்லர்
என்னூர் மக்கள்
கல் அடுக்கிப் பகிர்ந்து கட்டி
பனை ஓலை வெட்டி மிதித்து
கொட்டும் தென் ஓலை-ஊறவைத்து
கிடுகு பின்னி,
கடல் வற்றிக்கிடக்கும் காலத்து
நண்டு பிடிப்பும்

கொஞ்சம் பயமென்றால் நத்தை
புறக்கலும்,மாரிக்கு
தும்பை மிசிட்டை பசளி குறிஞ்சா
தூதுவளை என ஏராளம்
இயற்கை கொடுத்த கொடை,
எந்த இயந்திரமோ
இயக்கும் படகுகளோ அற்று
தன்னிறைவாய் வாழ்ந்த மண் மக்கள்

சூழுக்குப் போக கட்டும் சூள்
சுடு கலமாய் தெரியும் காலமிது
வீசும் சூளருவாளில்
வீழும் மீன்களால் சொந்தை நிரம்பும்,
கரையில் நடந்தபடி
கையில் தயாரான வீச்சு வலையொடு
கடல் அசைவை கண்நோக்கும்
சூடையோ நெத்தலியோ கெழுறோ
கூடிவருவது தெரியும்
வீழும் அத்தனையும் வீச்சு வலையில்
தப்பாது,
பனை பாளை தள்ளும் பருவம் தெரியும்
முட்டி நிரம்பிக் கள் வழியும்
கொட்டிய பனங்காய்
ஒடியலாய் புழுக்கொடியலாய்
பனாட்டாய் உழைப்பில் மிளிரும்
கூழ் காய்ச்சிக் குடிக்க புயங்கள் நிமிரும்

முற்றத்தில் நிற்கும் கோழிகள்
முட்டையிட்டுக் கொக்கரித்துத் தரும்,
பட்டிக்குக் காலை பசுக்கள்
பால் சுரந்து வந்து படலையை முட்டும்
ஆச்சியின் கையில் மத்து
விடியல் புறம்
மண்பானையில் சலசலவென
ஓசையெழுப்பும்
வெண்ணை திரழும் மோர் நிரம்பி வளியும்

பாய் மரம் கட்டி(ப்)
பயணித்த காலம் முதலாய்- கடல் அன்னை
எம் உறவுகள்- உயிரைப் பறிக்காப் பிணைப்பு
நெடுந்தீவு மண்ணுக்குக் கிடைத்த
இயற்கையின் அணைப்பிது
யாருக்கும் அடிபணிந்து வாழ்ந்தவரல்லர்
உழைத்து வாழ்ந்தவர்கள்
உழைப்பால் நிமிர்ந்தவர்கள்
கற்றுத்தேறி பார்புகழ நிமிர்ந்தவர்கள்

இடைநடுவே மறித்து
எம் உறவுகளை வெறியாடிய கோழைகள்
தான்வன்னியிலும் போர் நெறியை மீறி
தின்று புதைத்தும் திமிரடங்காப் பாழரசு

குமுறியெழும் அலைகளிலும் கூட
குமுதினி இயந்திரம் நிறுத்தி இயக்கி
அடங்கிப் போ தாயே என
படகோட்டும் நுட்பம்
யார் கற்றுக்கொடுத்தவர்கள்
திசைகாட்டி ஏதுமில்லா
வழிகாட்டிகள் -எம் படகோட்டிகள்
வீசும் காற்று
வானத்து வெள்ளி,நீரோட்டம் போதும்
திசைகாட்டி ஏதுமில்லா
வழிகாட்டிகள் -எம் படகோட்டிகள்
கடலோடி வாழ்ந்து
கற்றுத்தேறிய விற்பன்னர்கள்
செபமாலை அண்ணரும் அப்படித்தான்
வேலைக்குப் போனவர்கள்
சாணம் புறக்கி சுட்டு நீறாக்கி
மூடைகட்டி விற்கப்போனவர்கள்,
எம் ஆசான்கள் தாய்மார்கள்
முதியவர்கள்,பள்ளிச் செல்வங்கள்
பாலகர்கள்
உறவுகளை இழந்தோம்
கொடூரத்தில் மீண்டு
குடும்பத்தையே இழந்து நிற்கும்
அண்ணன் சாந்தலிங்கத்திற்கு
யார் சொல்லமுடியும் ஆறுதல்

மனிதம் சாகடிக்கப்பட்டு-
கடற்படைப்படகு
காவிவந்தது காட்டுமிராண்டிகளை
ஏவிவிட்ட கூட்டம்
பாராளுமன்றப் பன்றித்தொழுவத்தில்
கூடியிருந்து குதூகலித்திருக்கும்
யார் கேட்டார் நீதி
நீதியின் தேவதை ஆள்பவன்
வீட்டுக்கோடியில்
தூங்கும் போது
யாரிடம் கேட்பது நீதி

அரச படைகளின் நெட்டூரம்
மே மாதமெங்கும் நீண்டுபோனது
குண்டு கக்கிய ரோடாப்படகுகள்
எங்கள் கரைகளில் கட்டிக்கிடக்கிறது
நினைவாய் எழுப்பிய தூபியை
சூழப் படைமுகாம்
சுதந்திரமாய் உலாவந்த தெருக்கள்
என்னாகிப்போனது

முப்பபத்தொரு ஆண்டுகள் அல்ல
எம் உறவுகளை படுகொலையாக்கிய-
இனவெறி,
அரச இருப்புக்கு இன்னம்
தேவைப்படுகிறது

கோரமான நினைவுகளின் துயரம்-
இது கொடியது
மீள மீள நினைவு கொள்வோம்!
இளைய தலைமுறைக்கும்
ஏன் நிகழ்ந்ததென சொல்லுவோம்!
உங்கள் நினைவுகழும்
உயிர் தந்த மண்ணும்
எங்கள் நரம்பில் ஊறிக்கிடப்பதாய்
உங்கள் நினைவாக ஒன்றாகி நிற்போம்!
எம் நெஞ்சத்தில் நீங்கா உறவுகளே
அஞ்சலிக்கிறோம்!!

**தி.கங்காதரன்**

Delftmedia

# குமுதினி

வாசகர்களே,

உங்களது ஆக்கங்கள், கருத்துக்கள் அனைத்தையும் நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்

அடுத்த இதழ் ஆரோக்கியமாக வெளிவர உங்களது பங்களிப்பு மிக அவசியம்.

தொடர்புகளுக்கு

editor@kumuthini.org
delftmedia@hotmail.com

0033 650 737 248
0044 79 79 18 3400
0094 77 103 4461

www.delftmedia.com

இது ஒரு *Delft Media* வெளியீடு


விளம்பரத்
தொடர்புகளுக்கு
0033 650 737 248
094 77 103 4461